**அலகுத்தேர்வு– 7**

**10 ம் வகுப்பு தமிழ் மொத்த மதிப்பெண் – 20**

---

**I தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக. 2X1=2**

1.அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார். (தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)

2. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது. (தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.)

---

**II தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக. 2X1=2**

3. வானம் ___________தொடங்கியது. மழை வரும்போலிருக்கிறது.

4. ____________மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.

---

**III பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக. 3X2=6**

(தங்கும், மரம் வீடு, அவிழும். தயங்கும், மரவீடு, பார்ப்பவர், விருது, தோற்பவர், கவிழும், விருந்து)

5. காலை ஒளியினில் மலரிதழ் _________ சோலைப் பூவினில் வண்டினம்_____________

6. வாழ்க்கையில் ___________ மீண்டும் வெல்வர் – இதைத்

தத்துவமாய்ப் __________முயற்சி மேற்கொள்வர்.

7. கைதட்டலே கவிஞர்க்கு ___________–அவையோரின்

ஆர்வமே அவருக்கு_____________

---

**IV எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி 5X2=10**

8. உலகு என்னும் முடியும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக

9. நாடக கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றவர் யார்? அவர் பெற்ற விருதுகள் யாவை?

10. கரம்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக

11.வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக்குறளின் கருத்து என்ன?

12. வஞ்சப்புகழ்ச்சி என்றல் என்ன ? விளக்குக ?

13. சிறந்த அமைச்சருக்குரிய இலக்கணங்கள் எவை என வள்ளுவம் கூறுகிறது

---